பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 14 ஞாயிற்றுக்கிழமை 30.11.2025 கதிர் 022

**இனி இது ரகசியம் அல்ல!**

மழை, வெள்ளம், மண்சரிவு, அநியாயச் சாவுகள், வெள்ளத்தில் சிக்கிஉயிருக்குப்போராடியவர்களின் அவலம் என்று இலங்கை முழுவதுமே

☞2

# உயிரிழப்பு 159ஆக எகிறியது மேலும் 203 பேரை காணோம்

## பதுளை, கண்டி மாவட்டங்களில் அதிக பாதிப்பு



**இலங்கையின் 25 மாவட்டங்களிலும் பாரதூரமான அழிவுகளை ஏற்படுத்திய ‘தித்வா’ புயல் கரையைக் கடக்கின்ற போதிலும், தொடர்ந்தும் பதிவாகிக் கொண்டிருக்கும் நிலச்சரிவுகள் மற்றும் வெள்ளம் உள்ளிட்டவற்றால் பதிவான உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 159 வரை உயர்வடைந்துள்ளது. மேலும் 203 நபர்கள் காணாமல் போயுள்ளனர்.**

**மண்சரிவினால் பதுளை மற்றும் கண்டி மாவட்டங்களிலேயே அதிகளவான**

☞2

## அகன்றது ‘தித்வா’ அபாயம் இன்று கரையைக் கடக்கிறது

இலங்கையில்பெரும்அழிவுகளைஏற்படுத்தியுள்ள ‘தித்வா’சூறாவளி இன்று ஞாயிற்றுக்கிழமைகரையைக் கடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நேற்றைய தினம் திருகோணமலையிலிருந்து 80 கிலோ மீற்றல் தொலைவில் வடமேற்கில் நிலைகொண்டிருந்த இப்புயல், இலங்கைக்கு வடக்காக இந்திய கடற் பிராந்தியம் நோக்கி நகர்ந்து வருகிறது. இந்நிலையில் நேரடி பாதிப்புகள் நீங்கினாலும் மறைமுகமான

☞2

# இந்தியாவின் உதவிப் பொருள்கள் நேற்று கொழும்பை வந்தடைந்தன

மனிதப் பேரவலத்துக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு இந்தியாவினால் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட உடனடி நிவாரணப்பொருட்கள் நேற்று அதிகாலை கொழும்பை வந்தடைந்த நிலையில், இதுவரை இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள நிவாரணப்பொருட்களின் பெறுமதி 27 தொன்களாக உயர்வடைந்துள்ளன.

நாட்டில் நிலவும் காலநிலையின் விளைவாக நூற்றம்பதிற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன், பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் தொடர்ந்து மீட்புப் பணிகள் இடம்பெற்றுவருவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமானநிவாரணஉதவிகளைவழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதுமாத்திரமன்றி இக்கடினமான சூழ்நிலையில் இலங்கை மக்களுடனான உடன்நிற்பை வெளிப்படுத்தியிருக்கும் சர்வதேச நாடுகள், இலங்கைக்கு அவசியமான உடனடி நிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளன.

உடனடியாக உதவிக்கரம் நீட்டிய இந்தியா, தற்போது இலங்கைக் கடற்பரப்பில் நங்கூரமிட்டிருக்கும் தமக்குச் சொந்தமான ஐ.என்.எஸ்.விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ்.உதயகிரி ஆகிய விமானந் தாங்கிக் கப்பல்கள் ஊடாக 4.5 தொன் உலர் உணவுப்பொருட்கள் மற்றும் 2 தொன் ஏனைய உணவுப்பொருட்கள் என மொத்தமாக 6.5

☞6

# மாந்தை மேற்கில் 36 பேர் தொடர்ந்தும் வெள்ளத்தில்

## மீட்பு நடவடிக்கைகள் தோல்வி

மாந்தை மேற்கு விநாயகர்புரத்தில் வெள்ளத்தால்சூழப்பட்டநிலையில்சிக்கிக் கொண்டுள்ள 36 பேரை இன்னமும் மீட்க முடியாத அவலம் ஏற்பட்டுள்ளது. அவர்களை மீட்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாகவும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை என்றும் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற

☞2

## தொற்று நோய்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்

### யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர்

வெள்ள அனர்த்தத்தின் பின்னர் நோய்களில் சிக்கிக் கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளுதல்தொடர்பில்யாழ். போதனாவைத்தியசாலைபணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

☞6

## இலங்கையை மீளவும் கட்டியெழுப்ப அமெ, சீனா, ஐ.ஒன்றியம் முழு உதவி

இலங்கையில் நிலவும் மழைக் காலநிலையின் விளைவாக ஏற்பட்டுள்ள மனிதப்பேரவலத்துக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கையர்களுடனான உடன்நிற்பை வெளிப்படுத்தியிருக்கும் அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட உலகநாடுகள், நாட்டை மீட்டெடுத்து மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத்தயாராக இருப்பதாக உறுதியளித்துள்ளனர்.

இலங்கையில்நிலவும்காலநிலையின்விளைவாகப் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன், பெரும்எண்ணிக்கையானோர்பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களிலும் தொடர்ந்து மீட்புப்

☞2

## அமெரிக்கா 2 மில். டொலர் உதவி

மிகமோசமான மனிதப் பேரவலத்துக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைமக்களுக்கு அவசியமான உடனடி நிவாரண உதவிகளுக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் 2 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையின் விளைவாக நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன், பெரும் எண்ணிக்கையானோர்பாதிக்கப்பட்டுள்ளனர். நாடளாவியரீதியில்தொடர்ந்துமீட்புப்பணிகள் இடம்பெற்றுவருவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான நிவாரண உதவிகளை வழங்குவதற்கும்

☞2

## மத்திய மாகாணத்தில் முற்றாக தொலைத் தொடர்புகள் பாதிப்பு

மழைக்காலநிலைகாரணமாகநாட்டின்பல பகுதிகளிலும் குறிப்பாக மத்திய மாகாணத்தில் நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை உள்ளிட்ட மாவட்டங்களில் தொலைபேசித் தொடர்புகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

புதன்கிழமை மாலை முதல் பாதிக்கப்பட்ட தொலைபேசித் தொடர்பு சேவைகள் வழமைக்குத்திரும்பவில்லை.இதனால்குறித்த மாவட்டங்களில் வாழும் மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர்.

☞2

## இனி இது .....

கடந்த சில நாள்களாக அல்லோலகல் லோலப்பட்டுக்கொண்டிருக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாணவர்கள்சிலருக்குமட்டும் இருப்புக்கொள்ளவில்லை போலுள்ளது. அதனால் அவர்களில் 19 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடமாணவர்கள்மாணவர்களேகைதுசெய்யப் பட்டுள்ளவர்கள். பகிடிவதை புரிந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் அனைவரும் நேற்றுக் கைது செய்யப்பட்டு நீதிவான் முன் நிறுத்தப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடார் நீதிவான்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் சிங்கள மாணவர்கள். கைது இடம்பெற்றதற்கானஅதிதீவிரசம்பவம்நவம்பர் 21இடம்பெற்றது என்று சொல்லப்படுகின்றது. முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் கல்வி பயிலும் பெரும்பான்மை இன மூத்த மாணவர்கள், அதே பீடத்தில் கல்வி பயிலும் பெரும்பான்மை இன முதல்வருட மாணவர்கள் 15 பேரை பல்கலைக்கழகத்திற்குள் வெளியே உள்ள வீடொன்றுக்கு அழைத்துச்சென்று தாக்குதல் நடத்தி பகிடிவதை செய்துள்ளனர் என்பதே குற்றச்சாட்டு.

சம்பவம் தொடர்பாக மாணவர்கள் செய்த முறைப்பாட்டின் பாரதூரத் தன்மையைக் கருத்தில்கொண்டுவிடயத்தைப்பல்கலைக்கழக நிர்வாகம் பொலிஸாரிடம் பாரப்படுத்தியதாகத் தெரிகிறது. அதன் பின்னர் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் வாக்குமூலங்களைப் பெற்ற கோப்பாய் பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு பகிடிவதையில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்பட்ட 19 மாணவர்களை அடையாளம் கண்டு கைது செய்துள்ளனர்.

கைதான 19 மாணவர்களும் நேற்று யாழ்ப்பாணம் மேலதிக நீதிவானிடம் முற்படுத்தப்பட்ட நிலையில், அனைவரையும் டிசெம்பர் 3 வரை விளக்கமறியலில் வைக்குமாறுநீதிவான்உடனேஉத்தரவிட்டார்.

பகிடிவதை என்கிற இந்த வன்மம் பிடித்த மனநிலைஎப்போதுதான்மாணவர்களைவிட்டு விலகுமோ தெரியவில்லை..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## உயிரிழப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன. கண்டியில் 52 மரணங்கள் பதிவாகியுள்ளதோடு, 105 பேர் காணாமல் போயுள்ளனர். பதுளையில் 52 பேர் உயிரிழந்துள்ளதோடு, 42 பேர் காணாமல் போயுள்ளனர்.

நாடு முழுவதும் 2 லட்சத்து 34 ஆயிரத்து 503 குடும்பங்களைச் சேர்ந்த 8 லட்சத்து 33 ஆயிரத்து 985 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 34 ஆயிரத்து 198 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 22 ஆயிரத்து 822 நபர்கள் 919 தற்காலிக பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றிரவு தெரிவித்தது.

பன்னலையில் உள்ள முதியோர் இல்லம் வெள்ளத்தில் மூழ்கி, போக்குவரத்து பாதிக்கப்பட்டதால், அங்கிருந்த 11 முதியோர் உயிரிழந்துள்ளனர். தொடர்ச்சியான கனமழையால் குறித்த முதியோர் இல்லம் விரைவாக நீரில் மூழ்கியது. இதனால் பலர் உள்ளேசிக்கியுள்ளனர். எனினும்கடுமையான வானிலை நிலவியபோதிலும், அவசரகாலப் பணியாளர்களும் தன்னார்வலர்களும் சிரமமான நடவடிக்கைக்குப் பிறகு 14 பேரை மீட்டுள்ளனர்.

வெலிமடை - நுவரெலியா பிரதான வீதியில் கவரம்மன பிரதேசத்தில் மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. இதன் போது அங்கு வீதியிலிருந்து மண் அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த வீதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடர்த்தை எதிர்கொண்டுள்ளனர்.

சரி விழுந்த மண்மேட்டினை அகற்றிக் கொண்டிருந்த போதே, மீண்டுமொருமுறை பாரிய மண்சரிவு இடம்பெற்றதால் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. குறித்த சந்தர்ப்பத்தில்அங்கிருந்தலொறிசாரதியொருவர் காணாமல்போயுள்ளதோடு, மண் சரிவிற்குள் சிக்கிய ஒருவர் மீட்கப்பட்டார்.

இதேவேளை வெலிமட - கெப்பெடிபொல பொலிஸ் நிலையத்துக்கருகில் ஏற்பட்ட மண் சரிவினால் வெலிமடை - நுவரெலியா பிரதான வீதி முற்றாக மூடப்பட்டது. மண் அகற்றும் பணிகளில் ஈடுபட்டிருந்த போது, குறித்த பகுதியிலிருந்து இரு சடலங்கள் மீட்க்கப்பட்டுள்ளன.

அலவத்துகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அங்கும்பர வீதியில் ரம்புக்கெல கிராமத்தில் நேற்று அதிகாலை பாரிய மண்சரிவு பதிவாகியுள்ளது. குறித்த கிராமத்தில் வசித்து வந்த பெருமளவான மக்கள் காணாமல் போயுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. ஆனால் அங்கு வாழ்ந்தவர்கள், காணாமல்போனோர் மற்றும் உயிரிழப்புக்கள் குறித்து எவ்வித தகவலும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீட்பு குழுக்களுக்கு குறித்த பகுதிக்கு செல்ல முடியாத நிலமை காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொத்மலை - பூண்டுலோயா பகுதியிலும் பாரிய மண் சரிவு ஏற்பட்டுள்ளது. குறித்த பகுதிகளிலும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை குறித்த எந்தவொரு தகவலையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலமை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கொத்மலை - றம்பொட பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்போது காணாமல்போனோரைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குருணாகல் - புதுக்குளம் பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவில் 4 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. குறித்த வீடுகளில் சுமார் 10 - 15 நபர்கள் இருந்திருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். அவர்களைத் தேடும் பணிகளும் பாதுகாப்பு படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குருணாகலில் இந்துக்கொட, இப்பாகம, பல்லியத்த பிரதேசங்களில் ஏற்பட்ட மண்சரிவுகளில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளதோடு, 24 பேர் காணாமல் போயுள்ளதாககுருணாகல்மாவட்டசெயலாளர் சந்தன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரநாயக்க - அம்பலகம பிரதேசத்திலும் இவ்வாறு பாரிய மண்சரிவு பதிவாகியுள்ளது. குறித்த மண்சரிவில் சுமார் 120 பேர் வரை காணப்படுவதாகவும், அவர்களில் குறைந்தபட்சம் 20 சிறுவர்கள் இருப்பதாகவும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உதவி கோரிய நபர்கள் மீட்பு குழுவினரிடம் தெரிவித்துள்ளனர். குறித்த பிரதேசத்தில் கடந்த இரண்டுதினங்களாக மின் விநியோகம் தடைபட்டுள்ள நிலையில், அவர்களை மீட்கும் பணிகளும்மிகுந்தசிரமத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுகாலை6மணியுடன்நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் கண்டி மாவட்டத்திலேயே அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. கண்டி - நில்லம்ப பிரதேசத்தில் 431 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. மேலும் கேகாலையில் 277 மி.மீ., கிளிநொச்சியில் 274 மி.மீ., கண்டியில் 266 மி.மீ., குரணாகலில் 247 மி.மீ., கம்பஹாவில் 237 மி.மீ. என மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதுமாத்திரமன்றி இக்கடினமான சூழ்நிலையில் இலங்கை மக்களுடனான உடன்நிற்பை வெளிப்படுத்தியிருக்கும் சர்வதேச நாடுகள், இலங்கைக்கு அவசியமான உடனடிநிவாரண உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றன எனவும் அறிவித்துள்ளன.

அதற்கமைய 'டித்வா' சூறாவளியின் காரணமாக இலங்கை மக்கள் மிகக்கடிமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருக்கின்றனர் எனவும்,இவ்வேளையில்தாம்இலங்கையுடன் உடன்நிற்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்கா, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உடனடி நிவாரண உதவிகளுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வகையில் 2 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளது.

அத்தோடு இந்த உதவி தாம் இலங்கையுடன்பேணிவரும்மிகநெருக்கமான பங்காண்மையைப் பிரதிபலிப்பதாகவும் அமெரிக்க தெரிவித்துள்ளது. அதேபோன்று இடர்த்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கான உடனடி உதவியாக 50,000 டொலர் நிதியையும், 25,000 டுனா மீன் டின்களையும் வழங்கத் தீர்மானித்திருப்பதாக மாலைதீவு ஆளும்தரப்பும் அறிவித்துள்ளது.

## மத்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாவட்டங்களில் மாத்திரமின்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் இயற்கை இடர்ங்களால் பாதிக்கப்பட்டவர்கள் உதவிகளைக் கோருவதற்கு கூட எவரையும் தொடர்பு கொள்ள முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

உதவிகள் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்வதற்காக வழங்கப்பட்ட தொலைபேசி எண்கள்கூட செயற்பாட்டில் இல்லாதமையால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணிகள், அவர்களுக்கான உணவு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்குவது என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

கடுகன்னாவ மற்றும் வத்தளை உள்ளிட்ட பகுதிகளில் முக்கிய ஃபைபர் ஆப்டிக் கேபிள்கள் சேதமடைந்ததால், நாட்டின் பல பகுதிகளில் தொலைத்தொடர்புச் சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக டிஜிட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் பரவலாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு மற்றும் தொடரும் மின்தடைகள் ஆகியவை பல மாவட்டங்களில் மேலும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளன. இதனால் பெருமளவான மக்கள் நிலையான தொலைபேசிமற்றும்இணையஇணைப்புகள் இன்றித் தவிக்கின்றனர்.

சீரமைப்புப் பணிக் குழுக்களும், தொலைத்தொடர்பு இயக்குநர்களும்சவாலான சூழ்நிலைகளில் அத்தியாவசியத் தொடர்பு இணைப்புகளை மீட்டெடுக்க முயற்சிப்பதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இருப்பினும், சில பகுதிகளில் செல்ல முடியாத பாதைகள் மற்றும் உயரும் நீர்மட்டம் காரணமாக சீரமைப்பு முயற்சிகள் தாமதமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அவசர நிலைப் பணியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்புக்கு முன்னுரிமை அளித்து வருவதால், நிலமை சீரடைந்தவுடன் முழு இணைப்பும் மீட்டெடுக்கப்படும் என்று உறுதியளித்து, பொதுமக்கள் பொறுமையாக இருக்குமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளைவழங்குவதற்கும்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டோருக்கான அனுதாபத்தையும்,இக்கடினமானவேளையில் தமது உடன்நிற்பையும் வெளிப்படுத்தி உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது உத்தியோகபூர்வ 'எக்ஸ் தளப்பக்கங்களில் பதிவுகளைச் செய்துள்ளனர்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம்

'டித்வா' சூறாவளி, கடும் வெள்ளம், மண்சரிவு உள்ளடங்கலாகத் தொடர்ந்து மழைக் காலநிலையை ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தின் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறிக்கொள்கிறோம். இந்தப் பேரிடரில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதை முன்னிறுத்தித் தொடர்ந்து பணியாற்றிவரும் தரப்பினருக்கு எமது நன்றியை வெளிப்படுத்துகிறோம்.

எதிர்வரும்நாட்களில்உதவிமுயற்சிகளுக்கு அவசியமானஒத்துழைப்பைவழங்கத்தயாராக இருக்கிறோம்' என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் ரொமி பிகொட் அறிவித்துள்ளார்

### மாலைதீவு அரசுத் தலைவர்

'டித்வா' சூறாவளியின் மிகமோசமான தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்காகப் பிரார்த்திக்கிறோம். தமது அன்புக்குரியவர்களையும், வீடுகளையும், வாழ்வாதாரத்தையும் இழந்து நிற்கும் சகலரையும்நினைவுகூருவதுடன்அவர்களுக் காகப் பிரார்த்திக்கிறேன். இந்தக் கடினமான சூழ்நிலையில் உங்களது துன்பங்களை மாலைதீவு மக்கள் பகிர்ந்துகொள்வார்கள் என்பதை அறிவேன்.

இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும், மீளக்கட்டியெழுப்புவதற்கும், முன்நோக்கிப் பயணிப்பதற்குமான இலங்கையின் முயற்சிகளுடன் நாம் உடன்நிற்கிறோம். அத்தோடு இவ்வேளையில் களத்தில் நின்று தொடர்ச்சியாக உழைக்கும் அதிகாரிகள், முன்னரங்க செயற்பாட்டாளர்கள் மற்றும் தன்னார்வலர்களைப்பெரிதும்பாராட்டுகிறோம்' என மாலைதீவு அரசுத் தலைவர் அப்துல்லா ஷஹிட் பதிவிட்டுள்ளார்.

### ஐ.நா அபிவிருத்தி செயற்திட்டம்

தற்போதைய இடர் சூழ்நிலையின் விளைவாகப் பலர் உயிரிழந்திருப்பதுடன், அதிகளவானோர் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து மிகுந்த கவலை அடைகிறோம். இத்தகைய பின்னணியில் நாம் ஐக்கிய நாடுகள் குடும்பத்துடன் இணைந்து பாதிக்கப்பட்டதரப்பினருடன்உடன்நிற்கிறோம். அதுமாத்திரமன்றி நாட்டை மீள வலுவாகக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறோம் என ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்செயற்திட்டத்தின்இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசூஸா குபோட்டா அவரது எக்ஸ் தளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

### சீனத் தூதரகம்

இயற்கை இடர்த்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கும், வெள்ளத்தில் சிக்குண்டிருக்கும் மக்களுக்கும் எமது ஆழந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும். இவ்வேளையில்சீனாவின்உதவிஇலங்கையைவந்தடையவிருக்கிறது. இக்கடினமான தருணத்தில் நாம் இலங்கையுடனும், மக்களுடனும் உடன்நிற்கிறோம் என இலங்கையிலுள்ள சீனத்தூதரகம் பதிவிட்டுள்ளது.

### சுவிட்ஸர்லாந்து உயராணையர்

இலங்கையில் பதிவாகியுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்காகப் பிரார்த்திக்கிறோம். அனைவரையும் பாதுகாப்பாக இருக்குமாறும், உள்நாட்டு அதிகாரிகளின்அறிவுறுத்தல்களைப்பின்பற்றிச் செயற்படுமாறும் கேட்டுக்கொள்கிறோம்' என இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து உயராணையர் சிரி வோல்ற் வலியுறுத்தியுள்ளார்.

### ஐரோப்பிய ஒன்றியம்

மிகமோசமாக 'டித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட இலங்கைமக்களுடன்ஐரோப்பிய ஒன்றியம் உடன்நிற்கிறது. இவ்வேளையில் அதிகாரிகளினதும், அத்தியாவசிய சேவை ஊழியர்களினதும் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் அதன் எக்ஸ் தளப்பதிவில் குறிப்பிட்டுள்ளது.

## மாந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சீது விநாயகபுரம் மக்களை மீட்கும் முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. மன்னார் மாவட்டத்தினுடைய மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கூரலாய் கிராம அலுவலர் பிரிவின் சீது விநாயகர்புரம் பகுதியில் 36 பேர் வெள் ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.


கடந்த மூன்று தினங்களாக பாதிக்கப் பட்டவர்களை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை வெற்றி அளிக்கவில்லை. மூன்றுதடவைகள்கடற்படை படகுகள் ஊடாகக்கடற்படையினர் அவர்களை மீட்க முயற்சிகளை மேற்கொண்டபோதும் அது வெற்றி அளிக்கவில்லை ஆகவே அப் பகுதி மக்களை மீட்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்று - அவர் தெரிவித்தார்.

JDr

# JDR CARE HOME & MEDICALS




மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு



## FACILITIES

Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care





## BOOK NOW

**0701348384**

**46,Brodie Lane, Jaffna**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசின் செயலிழப்பின் உண்மை முகம்

நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான உயிர்கள் (159 சாவுகள், 203 காணாமற்போதல்கள்) இழக்கப்பட்டு மக்கள் அதிர்ச்சியில் உறைந்திருக்கும் இந்தக் கணங்களில், 'இந்த உயிரிழப்புகள் தவிர்க்க முடியாதவையா?' என்ற கேள்வி ஒவ்வொரு மனசாட்சியையும் ஆட்கொண்டுள்ளது. 'டித்வா' எனப்படும் இந்தப் புயல் இலங்கையை விட்டு விலகிவிட்டாலும், அது பின்னால் விட்டுச் சென்ற அழிவின் அளவைக் கணக்கிடத் தொடங்கியிருக்கும் அச்சமடைந்த மக்களாக நாம் இருக்கிறோம். ஆனால் ஒரு உண்மை ஏற்கனவே தெளிவாகியுள்ளது – இந்தப் பேரழிவின் பொருளாதாரச் சுமை நாட்டைத் தாங்க முடியாத அழுத்தத்திற்குள் மீண்டும் தள்ளுகிறது.

நொறுங்கிப்போன சாலைகள், இடிந்துப் போன பாலங்கள், அடித்துச் செல்லப்பட்ட தொடருந்துப்பாதைகள், சேதமடைந்த அணைகள், சேதமடைந்துபோன நீர்ப்பாசன அமைப்புகள், நதிக்கரைகளிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் – இவை அனைத்தையும் மீண்டும் கட்டமைப்பதற்குத் தேவையான தொகை ரூபாய்களில் கணக்கிட முடியாத ஒன்று; அது பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்பது நிச்சயம். சுதந்திரத்திற்கு பிறகு ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் முழுமையாக மீளாத, பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் தாங்குதலால் எப்படியோ மூச்சுவிடும் நிலையில் உள்ள நாடு மீண்டும் ஒரு பெரும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் பதிலளிக்க வேண்டிய ஆளும்தரப்பின் செயல்பாடு ஆச்சரியமாக செயலிழந்து போயுள்ளது. பேரழிவு எவ்வளவு பெரியது என்பதை ஒப்புக்கொள்வதே பிரச்சினை ஏற்படுத்தும் என்று அது எண்ணிவிட்டதா என்ற சந்தேகம்கூட எழுகிறது. உண்மையில், டித்வா புயல் இலங்கையை முழுவதையும் ஒரே தேசியப் பேரிடர் வலயமாக மாற்றியிருக்கிறது.

மக்கள் மற்றும் வணிகத் துறைகள் ஏற்கெனவே அசாதாரண வரிப்பளுவால் சீர்குலைந்துள்ள நிலையில், மீட்பு மற்றும் மறுகட்டமைப்புச் செலவுகளை அவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பது பொருளாதார தற்கொலைக்கு ஒப்பாகும். எனவே ஆளும்தரப்பு அவர்களுக்கான நிதி உதவிகளைத் தாராளமாக வழங்கவேண்டியது கட்டயாம்.

இந்தப் புயலின் தாக்கம் சுற்றுலாதுறையையும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. மலைநாட்டு மாவட்டங்களில் சாலைகளும் தொடருந்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில், அதிக பயணிகள் வருகை தரும் பருவத்தில் நாடு தன்னைத் தானே விரைந்து சீர்படுத்திக் கொள்ள எந்தளவு திறன் வைத்திருக்கிறது என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது. அவசரநிலை அறிவிப்புகள் இலங்கைக்குத் தற்போது அவசியமாக இருந்தாலும், அது வெளிநாட்டு பயணிகளின் மனதில் பாதுகாப்புக் குறித்த கேள்விகளை எழுப்பி அவர்களின் வருகையைக் கட்டுப்படுத்தும்.

இதற்காகவே இலங்கை அவசரமாக பன்னாட்டு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை நாடவேண்டும். உணவுக் கட்டுகள் வழங்குவதற்காக மட்டுமல்ல; சாலைகள், பாலங்கள், நதிக்கரைகள், அணைகள், போக்குவரத்து பாதைகள் போன்ற பொருளாதாரக் குருதி நாளங்களை மீண்டும் கட்டமைக்க இதுவே ஒரே வழி. ஆனால் இந்த அழிவின் அடியில் உள்ள இன்னும் ஆழமான காயம் ஆளும்தரப்பின் செயலிழப்பு.

இரண்டு வாரங்களுக்கு முன்பே காலநிலை எச்சரிக்கைகள் வழங்கப்பட்டபோதும், அதனை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. 12 நவம்பர் அன்று தானே வானிலைத் திணைக்களப் பணிப்பாளர், சுழற்சி காற்றழுத்தங்கள் திடீரென தோன்றுவதில்லை; பல நாட்கள் முன்னரே உருவாகின்றன என்று விளக்கினார். முன்கூட்டியே இருந்த இந்த 'போதுமான அறிவுறுத்தல்கள்' ஆளும்தரப்பின் கண்களுக்குத் தெரியவில்லையா?

புயல் தாக்கத் தொடங்கிய நாளன்று (நவ. 26), ஜனாதிபதி அவசரக் கூட்டங்களை நடத்தவில்லை; மாவட்ட நிர்வாகங்களை ஒருங்கிணைக்கவில்லை; இடர் முகாமைத்துவ மையத்தை இயக்கவில்லை. அதற்குப் பதிலாக திரைப்பட தயாரிப்பாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பில் நேரத்தைச் செலவிட்டார். மூன்று நாட்களுக்கு பிறகுதான் 'உடனடிக் கட்டுப்பாடற்ற நிவாரணம்' வழங்குமாறு உத்தரவு விடுக்கப்பட்டது. ஆனால் அதற்குள் எத்தனையோ உயிர்கள் ஏற்கனவே பறிந்து விட்டன.

இடர் முகாமைத்துவ மையம் எனும் அமைப்பு, 25 ஆண்டுகளாக அரசின் நிதியும் பன்னாட்டு நன்கொடையும் பெற்றும், அதன் இணையதளத்தில் அவசர எச்சரிக்கைகள் குறிப்பிடப்படாத நிலை, தகுந்த முன்னெச்சரிக்கை செயல்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலை இவை அனைத்தும் அந்த அமைப்பின் செயல்பாடே ஒரு'பேரழிவு' என்பதை நிரூபிக்கின்றன.

மாவட்டச் செயலாளர்கள் அவசரநிலை அறிவிக்கப்படாததால் உணவுப் பொருட்களை வாங்க முடியாமலும், மருத்துவர்கள் மருந்துகளை வாங்க முடியாமலும், சிக்கல்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டனர். அதிக மழை எச்சரிக்கை இருந்தும் அணைகளை நிர்வகிக்கும் அதிகாரிகள், தண்ணீர் வெளியேற்றத்தை முன்கூட்டியே தொடங்காததால் பல பகுதிகளில் வெள்ளம் அதிகரித்தது.

இந்நிலையில் சுற்றுலாதுறை 'நாடு பாதுகாப்பானது' என அறிவிப்பு வெளியிட்டது. மக்கள் உயிர் துடித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் இது எவ்வளவு பொறுப்பற்ற செயல்?

பேரலையால் வீடிழந்த மக்கள் 48 மணிநேரத்திற்கு மேலாக ஒரு உணவுப் பெருளைக்கூட ஆளும்தரப்பிடமிருந்து பெறவில்லை. உயர்தரப் பரீட்சையை நடத்தும் அரச கட்டமைப்பு 3 நாள்கள் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதை கடைசி நேரத்தில்தான் அறிவித்தது. மருத்துவமனைகள் மருந்தின்றி செயலிழந்தன. அரசு எந்தச் சேவைகள் அத்தியாவசியம் என்பதையும் தெளிவாக்கவில்லை.

கடந்த காலங்களில் குறைபாடுகள் இருந்தபோதும், குறைந்தபட்சம் அரசு இயந்திரம் நகர்ந்தது. ஆனால் இம்முறை மக்கள் கேள்வி எழுப்பியது 'ஏன் யாரும் வரவில்லை? என்பதாகவே இருந்தது.

இன்று தெளிவாகிக் கொண்டிருப்பது ஒன்றே ஒன்றுதான். இயற்கையின் கோபம் உயிர்களைப் பறித்ததல்ல; அரசின் செயலிழப்பே உயிர்களைப் பறித்தது. இந்த நினைவு இனிவரும் காலத்தில் மிகப் பெரும் சுமை. ஆனால் இன்னொரு பேரழிவு நிகழாமல் தடுப்பது ஆளும்தரப்பின் பொறுப்பாகவே உள்ளது. அதற்கான முதல் படி, இந்தப் பேரழிவின் காரணங்கள் குறித்து தாராளமான, துல்லியமான, அரசியல் சார்பற்ற விசாரணை. ஏனெனில், அடுத்த புயல் எப்போது வரும் என்று நாம் அறிவோம்; ஆனால் அப்போதாவது ஆளும்தரப்புக்கள் செயல்படும் என்பதில் நம்பிக்கை பெற வேண்டியுள்ளது.

# அவசரகாலச் சட்டம் அறிவிப்பு

இலங்கையில் தற்போது நிலவும் மழைக் காலநிலை மற்றும் ஏற்பட்டுள்ள இடர்களைக் கருத்திற்கொண்டு பொதுமக்களினதும், நாட்டினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு அரசுத் தலைவர் அநுரகுமார அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

அரசுத் தலைவரின் ஆணைப்படி அவரது செயலாளரால் பிரசுரிக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் பொதுமக்கள் அவசர நிலையை கருத்திற்கொண்டு பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் இயல்புநிலையை பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசிய தேவைகள் மற்றும் சேவைகளை முன்னெடுப்பதற்கு இந்தத் தீர்மானத்தை எடுப்பது அவசியமானதாகும்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவாகிய நான் ' 1959 ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க சட்டம் மற்றும் தேசிய அரச சபையின் 1978 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் (40 ஆவது பிரிவு) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய அந்தக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இலங்கை முழுவதும் 2025.11.28 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட வேண்டும் என இத்தாள் ஊடாக பிரகடனப்படுத்துகிறேன்'.

அதேபோல் 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2ஆவது பிரிவின் பிரகாரம் அரசுத் தலைவர்க்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைய, உடன் அமுலுக்கு வரும் வகையில் , மின்விநியோகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல சேவைகள், பெற்றோலிய எண்ணெய் உற்பத்தி எரிவாயு உட்பட எரிபொருள் விநியோகம்,சுகாதார மற்றும் வைத்திய சேவை, பொது பயணிகள் போக்குவரத்து மற்றும் பண்ட விநியோக சேவைகள்,பொது போக்குவரத்து சேவைகள்,நீர் விநியோகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசிய திரவியங்கள் விநியோகம், மாவட்ட,பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவுகளுக்கு உரித்தாக்கப்பட்ட சேவைகள், அம்புலன்ஸ் வண்டிச் சேவைகள்,இலங்கை மத்திய வங்கி உட்பட சகல அரச வங்கி மற்றும் காப்புறுதிச்சேவைகள்,நீர்பாசனத்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள்,தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள், நிலம் நிரப்புதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகள்,விவசாயம் மற்றும் விவசாயத்துறையுடன் தொடர்புடைய சகல சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன - என்று அரசுத் தலைவரின் செயலாளரால் விசேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# இயல்பு நிலை பாதிப்பால் சிக்கலில் பணியாளர்கள்

### பாதுகாப்பை உறுதி செய்ய தொடருந்து சங்கம் கோரிக்கை

மழைக் காலநிலையால் தொடருந்து பாதைகள், சமிஞ்ஞை இயந்திரங்கள் சேதமடைந்துள்ள நிலையில் அப்பகுதிகளுக்குத் தொடருந்து சேவையாளர்களை அனுப்பி வைக்க முடியாத நிலை காணப்படுகிறது. பெரும்பாலான தொடருந்து நிலையங்களின் நிலைய பொறுப்பதிகாரிகள், சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள், தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கை தொடருந்துநிலைய அதிபர்சங்கம் அரசுத்தலைவரிடம் கோரிக்கை வைத்துள்ளது.

இலங்கை தொடருந்து நிலைய அதிபர் சங்கத்தின் பொதுச்செயலாளர் கசுன் சாமர வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பெரும்பாலான பகுதிகள் வெள்ளம், மண்சரிவு மற்றும் கடும்காற்று உள்ளிட்ட இடர்களுக்கு உள்ளாகியுள்ளன. இவ்வாறான இயற்கை இடர்களினால் தொடருந்து பாதைகள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன. இந்த அவசர நிலையிலும் தொடருந்து சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளார்கள்.

தொடருந்து பாதைகள், சமிஞ்சை இயந்திரங்கள் சேதமடைந்துள்ள நிலையில் அப்பகுதிகளுக்குத் தொடருந்து சேவையார்களை அனுப்பி வைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

குறிப்பாக கடிகமுவ, இஹல கோட்டை, பலன, கடுகன்னாவ, நானுஓயா, உகுவெல, மாத்தளை கெட்வெஸ்;டன் ஆகிய தொடருந்து நிலையங்களுக்கு அப்பிரதேச மக்கள் அச்சுறுத்தலான நிலையில் அவர்களின் பாதுகாப்புக்காக நேற்று (நேற்று முன்தினம்) சென்றுள்ளார்கள். இருப்பினும் இதுவரையில் (நேற்று) அந்த தொடருந்து நிலையங்கள் குறித்து எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை.

பேராதனை முதல் பதுளை வரையிலான தொடருந்து நிலையங்கள் மற்றும் றம்புக்கனை முதல் கண்டி மற்றும் மாத்தளை வரையிலான தொடருந்து நிலையங்களின், நிலைய பொறுப்பதிகாரிகள், மற்றும் சேவையாளர்கள் மற்றும் கல்வோயா, மனம்பிட்டிய, சிலாபம்,பொலன்னறுவை ஆகிய தொடருந்து நிலையங்களின் சேவையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# 24 மணி நேரமும் சேவைகளை வழங்க வைத்தியசாலைகள் தயார் நிலையில்

பேரிடரில் சிக்கி பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களுக்கு 24 மணிநேரமும் சிகிச்சை சேவைகளை வழங்க இலங்கையில் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் வைத்தியர்கள் தயார் நிலையில் உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவிக்கையில்,

தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு 24 மணிநேரமும் தொடர்ச்சியாக சிகிச்சை சேவைகளை வழங்க இலங்கையில் உள்ள வைத்தியசாலைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை ஊழியர்கள் பலரது வீடுகள் வெள்ளத்தில் மூழ்கி, மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும் சேவைக்கு சமூகளிப்பதற்கு முடியாத நிலையில் உள்ளவர்களுக்கான போக்குவரத்தை ஒழுங்கமைத்து வைத்தியசாலை நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறோம்.

அனைத்து மாவட்டங்களிலும் உயிர்களை மீட்பதற்காக வைத்தியர்கள் முதற்கொண்ட சுகாதார குழுவினர் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு அவர்கள் இருக்கும் பகுதிகளுக்கு நேரடியாக சென்று சேவைகள் வழங்கப்படுகிறது.

இந்நேரத்தில் எழும் சுகாதாரப் பிரச்சினைகள், உயிர் பாதுகாப்பு மற்றும் பிற சுகாதாரத் தேவைகள் தொடர்பில் 077-4506602 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்புக் கொண்டு உதவிகளை பெற முடியும்.

வைத்தியர்கள் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையும் கால வரையறையின்றி ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு களனி கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துச் செல்வதால் அதனை அண்மித்த பகுதியில் உள்ள மக்களுக்கு தேவையான அனைத்து சேவைகளையும் வழங்க கொழும்பு மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலக அதிகாரிகளுடனும் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மன்னாருடனான போக்குவரத்து துண்டிப்பு

கன மழை மற்றும் வெள்ளம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தை ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் இரு முக்கிய பாதைகளான மன்னார் - மதவாச்சி பிரதான பாதை மற்றும் மன்னார்-யாழ்ப்பாணம் பிரதான பாதை ஆகியவற்றைக் குறுக்கறுத்து வெள்ள நீர் பாய்ந்தோடுகின்றது. இதனால் போக்குவரத்து முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மன்னார் மாவட்டத்திற்கு ஏனைய மாவட்டங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்களை வெளியேற்ற முடியாத நிலையும் காணப்படுகின்றது. - இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் தெரிவித்தார். களநிலமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பெய்து வருகின்ற மழை மற்றும் வேறு மாவட்டங்களில் இருந்து குளங்களின் மேலதிக நீர் ஆகியவை பெருக்கெடுத்து மன்னார் மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களைத் துண்டித்து தனித்து விட்டுள்ளது. இதன் காரணமாக கூராய் மற்றும் குஞ்சுக்குளம் போன்ற பகுதிகளில் பொது மக்கள் பலர் தனித்து விடப்பட்டுள்ள நிலையில் தங்களைக் காப்பாற்றுமாறு கோரி இருக்கின்றார்கள். வெள்ளத்தின் நீரோட்டம் அதிகமாக இருப்பதன் காரணமாக அவர்களைப் படகுகள் மூலம் மீட்டெடுக்கும் நடவடிக்கை மிகவும் கடினமானதாக காணப்படுகின்றது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க விமானப்படையின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

நீடித்துள்ள மோசமான வானிலை காரணமாக விமானப்படையின் உதவியும் மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளும் கை கூடவில்லை. இரண்டு தடவைகள் முயற்சி செய்த பின்னர் தற்போது வவுனியாவில் வானூர்தி தரித்து நிற்கின்றது. இவ்வாறாக பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதில் முப்படையினர் மற்றும் பொலிஸாருடன் இணைந்து உரிய திணைக்களத்தினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 24 ஆயிரத்து 331 குடும்பங்களைச் சேர்ந்த 79 ஆயிரத்து 946 நபர்கள் அசாதாரண கால நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை விட 3 ஆயிரத்து 795 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 873 நபர்கள் 61 பாதுகாப்பு மையங்களிலே தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே மக்கள் தமது பாதுகாப்பை கருத்தில் கொண்டு பிரதேசச் செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலகர்களினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களை பின் பற்றிச் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து விவரம் சேகரிக்கும் நடவடிக்கைகளும் அதிகாரிகளினால் தொடங்கப் பட்டுள்ளன. நன்கொடையாளர்கள் மற்றும் அரசசார்பாற்ற அமைப்புக்களின் உதவியுடன் உலர் உணவுகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஆறாக மல்வத்து ஓயா காணப்படுகின்றது. அதில் தற்போது அபாய கட்டமாக 19 அடிக்கு நீர் பாய்ந்து கொண்டு இருக்கின்றது. அதன் காரணமாக ஆற்றங்கரையுடன் காணப்படுகின்ற அனைத்துக் கிராமங்களும் தற்போது வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. அதனை விட பாலியாறு, பரங்கியாறு போன்றவையும் அதிக அளவு நீரை வெளியேற்றுவதினாலும் மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள சுமார் 400 இற்கும் மேற்பட்ட குளங்கள் அனைத்தும் நிரம்பி நீர் பாய்ந்து கொண்டு இருக்கின்றது. மாகாண திணைக்களத்திற்குச் சொந்தமான சன்னார் குளம் உடைப்பெடுத்துள்ளதன் காரணமாக விவசாயிகளுக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. - என அவர் மேலும் தெரிவித்தார்.

# 206 வீதிகளில் தடை 10 பால்கள் சேதம்

நாட்டில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக, வீதிப் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். தற்போது அநுராதபுரம் மற்றும் நுவரெலியா ஆகிய நகரங்களுக்கான தரை வழி அணுகல் முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார். அதேநேரம், நாடு முழுவதும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் காரணமாக மொத்தம் 206 வீதிகள் தடைப்பட்டுள்ள நிலையில், 10 பாலங்கள் சேதமடைந்துள்ளன.

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் அமைந்துள்ள அத்துருகிரிய இடைமாறல் பகுதி வெள்ளத்தில் மூழ்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், பொதுமக்கள் அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்த்து, மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நாட்டில் நீடித்து வரும் கடும் மழை வீழ்ச்சி காரணமாக, 11 மாவட்டங்களுக்கு அதிகபட்ச மண்சரிவு அபாய எச்சரிக்கையான மூன்றாம் நிலை (சிவப்பு) எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ளது. இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மொனராகலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகியன அடங்குகின்றன.

இந்த மாவட்டங்களில் உள்ள மலைப் பாங்கான மற்றும் அபாயம் நிறைந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருப்பதுடன், அதிகாரிகள் வெளியேறுமாறு அறிவுறுத்தினால் தாமதமின்றிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அதிக மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளுக்கே இவ்வாறு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

# எம்.பிக்களுக்கு வாகனம் வாங்க ஒதுக்கிய நிதியை வெள்ள நிவாரணத்திற்கு எடுங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவென வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்ட ரூ.12,500 மில்லியனை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பயன்படுத்துங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்திருக்கின்றார்.:

நாடு பெரும் பேரனர்த்த சவால்களை எதிர்கொண்டு, பல துயரச் சம்பவங்கள் நிகழ்ந்து, நமது சக குடிமக்கள் தங்கள் உயிர்களையும், சொத்துக்களையும், வீடுகளையும் இழந்திருக்கும் இந்த நேரத்தில், 1,775 புதிய கெப் வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கிய ரூ.12,500 மில்லியனை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புக்ஷதற்கும், சேதமடைந்த நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

'டித்வா' சூறாவளிப் புயலால் ஏற்பட்ட கடுமையான பேரழிவால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் காரணமாக பல மாவட்டங்களில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் இருக்கும் மக்களின் சுகதுக்கங்களை கேட்டறிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுக் களப் பயணங்களை மேற்கொண்டார். இதன்போது கடுவெல கொத்தலாவல கல்லூரி, சங்கபிட்டித விகாரை, கடுவெல ஹேவாகம அபிநவ ராம விகாரை, கொரத்தோட்டை, நவகமுவ ஸ்ரீ அசோகராமய, போமிரிய கனிஷ்ட வித்திலாயம் உட்பட பல இடைத்தங்கல் முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

அங்கு கருத்துத் தெரிவித்தபோது வரவு - செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதம் நடந்து வரும் இச்சமயம், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மக்களின் நலனுக்காக புதிய கெப் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கிய இந்தப் பணத்தைப் ஒதுக்கும் வகையில் வரவு செலவுத் திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்குத் தேவையான ஆதரவைப் பெற்றுத் தருவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.



மேலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் உயிரைப் பாதுகாத்து, வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்ப, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மேலதிக நிதியைப் பெறுவதற்கு அர சாங்கம் குறை நிரப்பு பிரேரணை யொன்றை கொண்டு வரும் பட்சத்தில், அதற்கு நாம் எமது பூரண ஆதரவைத் தருவோம். இந்நேரத்தில் சர்வதேச ஆதரவைத் திரட்டும் மாநாடே தேவையாக காணப்படு கின்றது. எனவே இந்த மாநாட்டைக் கூட்டுவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு கூட்டும் பட்சத்தில் எதிர்க்கட்சியாக நாம் எமது நாட்டுக்குத் தேவையான நிதியைத் திரட்ட முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவோம். இனம், மதம், சாதி, வர்க்கம் மற்றும் கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு, சுயதொழில், மீன்பிடி மற்றும் பிற வாழ்வாதாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கையைப் பாதுகாக்க மக்கள் ஒன்றாய் கைகோர்த்து ஒன்றிணைந்து செயல்படவேண்டும் - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

## தொற்று.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில், அண்மைய நாட்களில் பெய்த மழை காரணமாக பல்வேறு சிக்கலான நிலைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது.

மழைநீர் பல்வேறு வாழ்விடங்களில் புகுந்ததன் காரணமாக லெப்டோஸ்பைரோசிஸ் நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. மேலும், தோல் வியாதிகள், சுவாசத் தொற்றுகள், வயிற்றோட்டம் போன்ற நோய்களும் ஏற்படலாம். ஆகவே, கீழ்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்:

அசுத்தமான நீரில் நடைபயணம் செய்த பிறகு, அல்லது அந்த பகுதிகளில் சென்று வந்தால், சவர்க்காரம் பயன்படுத்தி கை, கால் உள்ளிட்ட உடல் பகுதிகளை நன்றாகக் கழுவ வேண்டும்.

சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும். கொதிக்க வைத்த நீரைப் பருகுவது சிறந்தது.

வாழ்விடங்களை எப்போதும் தூய்மையாகப் பேணவேண்டும். சுகாதாரமற்ற உணவுகளைத் தவிர்க்க வேண்டும். உடல் நலத்தில் கவனம் செலுத்தி, நோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்க வேண்டியது அவசியம்.

வைத்திய சிகிச்சை தேவைப்படும் போது தாமதமின்றி வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## இந்தியாவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொன் உடனடி நிவாரணப் பொருட்களை வெள்ளிக்கிழமையே இலங்கைக்கு வழங்கியது.

அடுத்தகட்டமாக விமானம் மூலம் பொருட்களை அனுப்பிவைத்தது. நேற்று அதிகாலை அவை நாட்டை வந்தடைந்தன. இந்திய விமானப்படைக்குச் சொந்தமான சி-130 இலக்க விமானத்தின் ஊடாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்குக் கொண்டுவரப்பட்ட சுமார் 12 தொன் பெறுமதியான இந்த நிவாரணப்பொருட்களில் கூடாரங்கள், மழைக்கான ஜக்கெட்கள் (மேலங்கி), போர்வைகள், தூய்மை அங்கிகள் மற்றும் தயார் நிலையில் உள்ள உணவுப்பொருட்கள் என்பன உள்ளடங்குகின்றன.

அதனைத் தொடர்ந்து மீண்டும் நேற்று நாட்டை வந்தடைந்த ஐ.எல்-76 எனும் இலக்க இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் கொண்டுவரப்பட்ட 9 தொன் நிவாரணப்பொருட்களும் இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

அத்தோடு அவ்விமானத்தில் தேசிய இடர் முகாமை நிலைய வீரர்கள் 80 பேர் அடங்கிய 2 தேடல் மற்றும் மீட்புக்குழுக்களும் வந்தடைந்தன.

அதன்படி இந்தியா இதுவரையில் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக மொத்தமாக சுமார் 27 தொன் நிவாரணப்பொருட்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






## கலா ஓயாவில் சிக்கிய பஸ்ஸிலிருந்து

# 29 மணி நேர போராட்டத்தின் பின்னர் 69 பயணிகள் கடற்படையினால் மீட்பு

அநுராதபுரம், கலா ஓயாவில் வெள்ளத்தில் சிக்கிய பேருந்தின்கூரையில்தஞ்சமடைந்திருந்தோர்கடற்படையினரின் 29 மணித்தியால கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் நேற்று அதிகாலை மீட்க்கப்பட்டனர்.

குறித்த பேருந்தில் வெளிநாட்டுப் பெண் ஒருவர் உட்பட சுமார் 68 பயணிகள் காணப்பட்டனர். இவர்கள் மீட்கப்பட்டு, நொச்சியாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடும் மழையுடனான காலநிலை காரணமாக கலா வெவ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையால் அதனை அண்மித்த தாழ் நிலங்கள் மற்றும் வயல் வெளிகள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன.

இந்நிலையில் குறித்த பகுதியில் அநுராதபுரம் - புத்தளம் வீதியில் சென்று கொண்டிருந்த பேருந்தொன்று வெள்ளம் காரணமாக கலா வெவ பாலத்தில் சிக்குண்டது. பின்னர் அதிகரித்த வெள்ளப்பெருக்கினால் குறித்த பஸ் நீரில் அடித்துச் செல்லப்பட்டது. எனினும் பேருந்து நீரில் அடித்துச் செல்ல முன்னர் அதிலிருந்து வெளியேற்றப்பட்ட பயணிகள் அருகிலிருந்த வீடொன்றின் கூரை மீதேறி அமர்ந்திருந்தனர். யாழ்ப்பாணம் உயர் நீதிமன்ற நீதிபதியொருவரும் அந்தப் பேருந்தில் இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இடரில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் கடற்படையினரால் இடைவிடாது முன்னெடுக்கப்பட்டன. அதிகரித்த வெள்ளப்பெருக்கினால் மீட்புப் பணிகள் மிகுந்த சிரமமுடையதாக இருந்தது. இதன் காரணமாகக் கடற்படையின் 3 விசேட மேலதிக மீட்புப்படையினர் இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த மீட்பு பணிகளை காணொளி தொழிநுட்பத்தின் ஊடாக அரசுத் தலைவர் அநுரகுமார நேற்று சனிக்கிழமை அதிகாலை இராணுவத் தலைமையகத்திலிருந்து நேரடியாகக் கண்காணித்தார்.

சுமார் 29 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரப் போராட்டத்தின் பின்னர் அங்கு சிக்கியிருந்த பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் லசந்த டொட்ரிகோ தெரிவித்தார்.

'கலா ஓயா பாலத்துக்கு அருகில் பேருந் தொன்றில்பயணித்த68பயணிகளையும்மீட்கும் பணிகள் இடைவிடாது முன்னெடுக்கப்பட்டன. இரவு முழுவதும் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில்முன்னெடுக்கப்பட்ட இந்தபணிகளால் மீட்கப்பட்டவர்கள் நேற்று அதிகாலை நொச்சியாகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்'என்று இராணுவத்தளபதி மேலும் தெரிவித்தார்.

இந்த இடரில் சிக்கிய அம்பமுவ - கினிகத்தனைபிரதேசத்தைச்சேர்ந்த டபிள்யு.எம். ஷாந்த என்ற நபர் தனது அனுபவத்தைப் பகிர்ந்த போது தெரிவித்ததாவது:

புல்மோடையில் இருந்து கொழும்பு நோக் கியே பஸ் சென்று கொண்டிருந்தது. எச்சரிக் கைகள் இருந்தபோதிலும், அதிக வெள்ளம் சூழ்ந்த நீரில் பஸ் சென்றது. முன்னே செல்ல வேண்டாம் என சாரதியிடம் கூறினோம். ஆனாலும் அவர் முன்னோக்கிச் சென்றார். கலா ஓயா கிராமத்தை அண்மித்த போதே, பாலத்தில் -செல்ல வேண்டாம் எனக் கூறினோம். எனினும் முன்னோக்கிச் சென்ற போது நீர் மட்டம் அதிகரித்ததால் பஸ் அங்கு சிக்கிக் கொண்டது.

பஸ்ஸை முன், பின் என எங்கும் நகர்த்த முடியாத நிலையில், வெள்ள நீர் பஸ்சுக்குள் வரத் தொடங்கியது. அதன் பின்னர் கடற்படையினருக்கு அறிவித்தோம். அத்தோடு பஸ்ஸின் மேல் அனைவரும் ஏறிக் கொண்டோம். ஆண்களின் உதவியுடன் பெண்களும் மேலே ஏற்றப்பட்டனர். கடற்படையினர் எம்மை பஸ்ஸிலிருந்து இறக்கி, வீடொன்றில் கூரையில் ஏற்றினர்.

கூறுவதற்கும் மிகக்கவலையாகவுள்ளது. அந்த கூரையும் மிகவும் ஆபத்தான நிலையிலேயே இருந்தது. சுமார் 29 மணித்தியாலங்கள் அந்த கூரையில்தான் இருந்தோம். நான் புத்தளம் செல்வதற்காக , அநுராதபுரத்திலேயே இந்த பஸ்ஸில் ஏறினேன்.

மறுநாள் காலை விமானப்படையின் உலங்கு வானூர்தியொன்று வந்தது. எனினும் அதனை நாம் கீழே வர வேண்டாமெனக் கூறினோம். வானூர்தி கீழிறங்கினால் நாம் அமர்ந்திருந்த கூரை உடையக் கூடிய அபாயம் காணப்பட்டது.

கூரை உடைந்து விழும் பட்சத்தில் எவருமே உயிர் பிழைத்திருக்க முடியாது. அதனால் கடற்படை படகுவரும்வரைநீர்,உணவுஎதுவுமே இன்றி 29 மணித்தியாலங்கள் வெள்ளத்துக்கு மத்தியில் தத்தளித்தோம். பஸ்ஸின் கூரையிலிருந்தபோது வெள்ளத்தால் அதன் பிற்பகுதி உடைந்ததில் மூவர் கீழே விழுந்தனர். எனினும் கடற்படையினரின் துரித முயற்சியால் அவர்கள் பாதுகாக்கப்பட்டனர். எமது உயிரைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முப்படையினர், பொலிஸார் மற்றும் வைத்தியர்கள் உள்ளிட்டோருக்கு



காலைக்கதிர் Kalaikkathir

# மலையகத்திற்கான தொடருந்து சேவை எப்போது தொடங்குமெனத் தெரியாது

மலையகத்துக்கான தொடருந்து சேவையை ஆரம்பிக்கும் நாளைக் குறிப்பிட முடியாது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்சமர்ப்பிக்கும்ஆய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே அந்தத் தீர்மானம் எடுக்கப்படுமென தொடருந்து திணைக்கள பொதுமுகாமையாளர் ரவீந்திர பத்மபிரிய தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தற்போது நிலவும் காலநிலையால் தொடருந்து சேவை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சேவையாளர்களும் இடர்நிலைக்கு முகங்கொடுத்துள்ளார்கள். ஆகவே சேவையை முன்னெடுப்பது தற்போதைய நிலையில் சவால்மிக்கதாக காணப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கான தொடருந்து சேவை முழுமையாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் தொடருந்து பாதைகள் முழுமையாக வெள்ளநீரில் மூழ்கியுள்ளதால் சேவைகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

மலையகத்துக்கான தொடருந்து சேவையை விரைவாக மீளத் தொடங்குவதும் சவால்மிக்கதாக்க காணப்படுகிறது. மலையகத்தில் பெரும்பாலான பகுதிகளில் தொடருந்து பாதைகள் மண்சரிவால் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சமிஞ்ஞை கருவிகளும் சேதமடைந்துள்ளன.

மலையகத்தில் மண்சரிவு அபாயம் தொடர்ந்து எதிர்பார்க்கப்படுவதால் தொடருந்து வீதிகளை சீரமைக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஆகவே தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் சமர்ப்பிக்கும் ஆய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே தீர்மானம் எடுக்கப்படும்.

பாதிப்பற்ற பகுதிகளுக்கு தொடருந்து சேவைகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. காலி, அளுத்கம, மீரிகம, அவிசாவளை ஆகிய பகுதிகளுக்கு மாத்திரம் தற்போது தொடருந்து சேவைகள் வரைறுக்கப்பட்ட வகையில் இடம்பெறுகின்றன – என்றார்.

## சிலாபம் வைத்தியசாலையில் சிக்கியுள்ளோருக்கு உதவிகள்

சிலாபம் வைத்தியசாலையை அண்மித்த பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் வைத்தியசாலையிலுள்ள சிக்கியுள்ள நோயாளர்கள் உள்ளிட்டோருக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் அத்தியாவசிய சுகாதார பொருட்கள் ஆகியவை விமானப்படையின் பெல்-412 உலங்கு வானூர்தி மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

இரு பச்சிளம் குழந்தைகள், உலங்குவானூர்தி மூலம் அழைத்துவரப்பட்டு கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சீரற்ற வானிலையால் சிலாபம் வைத்தியசாலையினுள் சில அடி உயரங்களுக்கு வெள்ள நீர் புகுந்திருந்தது. இந்நிலையில் கீழ் தளத்திலிருந்த நோயாளர்கள் வைத்தியசாலையின் மேல் தளங்களுக்கு மாற்றப்பட்டிருந்தனர். எனினும் தற்போது வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கொழும்பு – புத்தளம் பிரதான வீதி அமைந்துள்ள பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் நோயாளர்கள், நோயாளர் கவனிப்பாளர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் வைத்தியசாலையின் மேல் மாடியில் தங்கியுள்ளனர். வைத்தியசாலையில் சிக்கியுள்ள மக்களுக்குத் தேவையான உணவு, குடினீர் மற்றும் அத்தியாவசிய சுகாதார பொருட்கள் ஆகியவை விமானப்படையின் உதவியுடன் பெல்-412 உலங்குவானூர்தி மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனில் ஜசிங்க தெரிவித்திருந்தார்.

அப்பகுதியில் ஏற்பட்டுள்ள மின் தடை காரணமாக, சிலாபம் வைத்தியசாலையில் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்த இரு பச்சிளம் குழந்தைகள், மற்றும் 10 வயதுடைய சிறுவன் ஒருவனும் குறித்த உலங்குவானூர்தி மூலம் அழைத்துவரப்பட்டு கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் ஒரு சில நோயாளர்களை விமானப்படையின் உதவியுடன் உலங்குவானூர்தி மூலம் அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் உள்ளவர்களுக்கான உணவு, குடிநீர் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் வைத்தியர் அனில் ஜசிங்க மேலும் தெரிவித்திருந்தார்.

சிலாபம் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவினுள்ளும் வெள்ள நீர் ஊடுருவியுள்ளளதுடன், நேற்று முன்தினம் இரவு வைத்தியசாலையிலிருந்த நோயாளர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

## வெளிச் சுற்றுலிகளுக்கு அவசர எண் அறிமுகம்

சீரற்ற காலநிலை காரணமாக பாதிப்புக்களுக்கும், அசௌகரியங்களுக்கும் முகங்கொடுத்திருக்கும் இலங்கையிலுள்ள சுற்றுலாப் பயணிகள், ஏதேனும் அவசர அல்லது சுற்றுலாத்துறை சார்ந்த உதவிகள் தேவைப்படின் 1912 என்ற அவசர தெலைபேசி இலக்கத்தின் ஊடாக இலங்கை சுற்றுலாத்துறை அவசர உதவிகள் நிலையத்தைத் தொடர்பு கொள்ளுமாறு வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையின் விளைவாக நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதுடன், பெரும் எண்ணிக்கையானோர் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் தொடர்ந்து மீட்புப்பணிகள் இடம்பெற்றுவருவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இந்த இடர் சூழ்நிலை காரணமாக ஏற்கனவே நாட்டுக்கு வருகைதந்த மற்றும் வருகைதரவிருக்கும் சுற்றுலாப்பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் இலங்கையிலுள்ள சுற்றுலாப்பயணிகளை உள்நாட்டு அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தியுள்ள வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத், அவசர உதவிகள் அல்லது சுற்றுலாத்துறை சார்ந்த உதவிகள் ஏதேனும் தேவைப்படும் பட்சத்தில் சகல தினங்களும் 24 மணிநேர சேவையில் இருக்கும் 1912 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இலங்கை சுற்றுலாத்துறை அவசர உதவிகள் நிலையத்தைத் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேபோன்று சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாப்பயணிகளுக்கு உதவும் இலங்கை விமான மற்றும் விமானசேவைகள் நிறுவனமும் அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிப்புக்கு அமைய இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தமது பயணங்களை இரத்துச்செய்வதற்கு அல்லது பிறிதொரு தினத்துக்கு மாற்றுவதற்கு விரும்பும் பயணிகளுக்கு அதற்கென எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

அத்தோடு பாதிக்கப்பட்ட சுற்றுலாப்பயணிகள் தமது வசதிக்கு ஏற்ப பயணத்திகதிகளை மாற்றியமைப்பதற்குஏற்றவாறான இலகுமீள்பதிவுக்கொள்கைநடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்கூறப்பட்ட கட்டணமற்ற சலுகையைப் பெறுவதற்கு சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாப்பயணி எனும் பிரகடனத்தை வழங்குதல் போதுமானதாகும்.

## மன்னாரின் பல இடங்களில் 100 பேர் மேல் சிக்கித் தவிப்பு

*மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் நுற்றுக்கும் அதிகமானவர்கள் தங்கள் இருப்பிடங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு அதற்குள் மூழ்கிய நிலையில், மரங்களிலும் வீடுகளின் கூரைகளிலும் தஞ்சமடைந்தவாறு தங்களை மீட்குமாறு அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் பலர் வீடுகளில் அகப்பட்டு, போக்குவரத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டு வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கியமையால் உயிரைக் காப்பதற்காக வீடுகளின் கூரைகள் மற்றும் மரங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு மரங்கள் கூரைகளில் தஞ்சமடைந்திருப்போர் தம்மை மீட்குமாறு அவசரக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.*

*குஞ்சுக்குளத்தில் மூவர் தேக்கமரத்தில் தஞ்சமடைந்துள்ளனர். அறுகம்குட்டு பிரதேசத்தில் 50 பேரும், மடுக்கரையில் 50 பேரும் என 103 பேர் இவ்வாறு அகப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை மீட்க விமானப்படை மற்றும் கடற்படையின் உதவி நாடப்பட்டபோதிலும், மழை தொடர்வதால் மீட்பு பணியில் நெருக்கடி நிலவுவதாக மாவட்டச் செயலர் தெரிவித்தார்.*



## பேராதனைப் பல்கலை மாணவர் அனைவரும் நலமாக உள்ளனர்

### துணைவேந்தர் அறிவிப்பு

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் தங்கும் விடுதியைச்சூழ ஏற்பட்டுள்ள வெள்ள நிலமையால் அங்கிருந்த மாணவர்களைத் தொடர்பு கொள்வதில் சிக்கல் நிலமை காணப்பட்டது. எனினும் அனைத்து மாணவர்களும் பாதுகாப்பாக இருப்பதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும், எந்தவொரு உயிராபத்தும் ஏற்படவில்லை என்றும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார். எனினும், நீர் வழங்கல் மற்றும் மின்சாரம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், தொலைத்தொடர்புச் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட குடிநீர் விநியோகமும் உணவுப் பொருட்களைப் பாதித்துள்ளது. இருப்பினும், பல உணவுப் பொதிகள் பெறப்பட்டுள்ளதாகவும், அதிகாரிகள் நிலமையைச் சமாளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களின் பெற்றோர் அமைதியாக பொறுமையாக இருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ள துணை வேந்தர், அனைத்து மாணவர்களும் பாதுகாப்பாக இருப்பதாகவும் உறுதியளித்துள்ளார். மகாவலி கங்கையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அரச தாவரவியல் பூங்காவின் சில பகுதிகள் உட்பட பல தாழ்வான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதியில் இரண்டாம் மாடி வரை வெள்ள நீர் உட்புகுந்திருந்தது.

நிலமை மோசமடைந்து வந்தமையால் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், பேராதனைப் பல்கலைக்கழகம் மறு அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கியுள்ள அனைத்து மாணவர்களும் பாதுகாப்பாக இருப்பதாகவும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும் பல்கலைக்கழக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களைச் சென்று பார்வையிடுவதற்காக, பிரதி போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன குணசேன பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். மாணவர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்று அவரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இருப்பினும் தொலைபேசி வலையமைப்புகள் மற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் தொடர்பு கொள்வது கடினமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2025இல் வெளியிடப்பெற்றது